## பத்தாம் வகுப்பு – தமிழ்

# வாசிப்பையும் எழுதுதலையும் சரி பார்க்கும் அட்டவணை

சரி பார்க்கும் அட்டவணை என்றால் என்ன? இதில் என்ன லாபம் என்று கேட்பீர்கள்?. கொஞ்சம் கவனமாய்க் கேளுங்கள். மாணவர்கள் தம் வாசிப்புத்திறனை, உங்கள் எழுத்துத் திறனை தாங்களே சரிபார்த்துக்கொள்ளும் சுய பரிசோதனை அட்டவணைதான் இது. நன்றாகப் படிக்கும், படிக்காத மாணவர்களுக்குப் பொருத்தமான ஒன்று இது. பெற்றோர்கள் மிகத் தைரியமாகப் பிள்ளைகளின் படிப்புத் திறனை இதில் கண்டுவிடலாம். நன்றாகப் படிக்கும் மாணவருக்குத் தன் பாடங்களில் எத்தனை 2 மதிப்பெண்கள் உள்ளன? 4 மதிப்பெண்கள் உள்ளன? எத்தனை மனப்பாடப் பகுதிகள் உள்ளன? என்று தெரியவேண்டும். வினா வரைவுத்தாள் திட்டப்படி அமைந்த வினா வகைகள் எவை என்பதும் தெரிந்திருக்கவேண்டும். ஆசிரியர்கள் சொன்னார்கள் என்று, அனைத்துக் கேளவிகளையும் விடைகளையும் உரு அடிப்பதன்று மாணவர்களின் பணி. கொஞ்சமாய் வாசித்து, அதிகமாய் மதிப்பெண் பெற முயலவேண்டும். எந்த எந்த இயலில் வினாக்கள் கேட்கவேண்டும் என்று தெரிந்த மாணவனே மிகச் சிறந்த புத்திசாலி. அவர்களால் மட்டுமே அதிக மதிப்பெண் பெற இயலும்.

இதில் இன்னொரு பிரச்னை உள்ளது. எல்லா வினா-விடைகளையும் படித்தாயிற்று என்று சொல்லலாம். ஆனால் எல்லாவற்றையும் எழுதிப் பார்த்தாயிற்றா என்றால் உதட்டைத்தான் பிதுக்குவார்கள். காரணம் என்ன? அவர்களுக்கு ஞாபகச் சக்தி இருக்கும் அளவிற்கு, வினாத்தாள் வரைவு தெரியவில்லை என்று அர்த்தம். அதைச் சரி செய்யவே வருகிறது – சரிபார்க்கும் அட்டவணை. எப்படி?

கீழே அட்டவணை தரப்பட்டுள்ளது. இவ்வட்டணையில் ஒவ்வொரு இயலிலும் எத்தனை வகையான வினாக்கள் உள்ளன என்பது பதிவாகியுள்ளது. எப்படி அட்டவணையைப் பயன்படுத்தவேண்டும் என்ற கேள்வி எழுகிறதல்லவா? இதோ சான்று.

1. ஒரு மதிப்பெண் பகுதியை முதலில் வாசியுங்கள். ஒரு இயலில் உள்ள 1 மதிப்பெண் வினாக்களை வாசித்துவிட்டு எழுதிப்பார்த்து, நீங்களே திருத்தவும். எதுவும் தவறில்லை எனில், அந்தக் கட்டங்களை டிக் செய்யவும். தவறு இருந்தால் மீண்டும் எழுதிப் பாருங்கள். சரியான பிறகே டிக் செய்யவும். (ஒவ்வொரு இயலாக வாசித்தும், முழு பகுதியை வாசித்தும் டிக் செய்யலாம்)
2. அடுத்து அடுத்த கட்டங்களில் இவ்வாறான பயிற்சியை மேற்கொள்ளுங்கள். ஒவ்வொரு கட்டங்களாக அமைந்தால் நலம்.
3. இப்படி செய்வதால் எதுவும் விடுபட வாய்ப்பில்லை. தவிரவும எந்தப் பகுதிகளில் நீங்கள் பலவீனமாக இருக்கிறீர்கள் என்பது உங்களுக்கே தெரிந்துவிடும்.
4. பிள்ளைகள் உடனமர்ந்து கவனிக்கும் பெற்றோர்கள், இந்த அட்டவணையின்படி டிக் செய்து வாருங்கள். அவர்கள் எழுதும் விடைத்தாள்களைத் தொகுத்து வையுங்கள். 1 மதிப்பெண், 2 மதிப்பெண் என்ற வரிசையில் தொகுத்து வாருங்கள். அல்லது வினாத்தாள் அமைப்பின்படியும் பிள்ளைகள் எழுதும் விடைத்தாள்களைத் தொகுத்து வைக்கலாம். இங்கு பெற்றோர் என்பது ஆசிரியர்களையும் சேர்த்துத்தான்.
5. இதன்வழியாகச் சரியான திட்டமிட்ட வாசிப்பு, எழுதிப் பார்க்கும் சோதனை, மிகச் சிறந்த அடைவு கிடைக்கிறது. திட்டமிட்ட வெற்றி என்பது மிகச் சிறந்த திட்டமிடல் என்பதை இந்த அட்டவணை வழியாக அடையலாம்.

**வாழ்த்துகளுடன்**

**ரா.தாமோதரன், அ.மே.நி.பள்ளி, மெலட்டூர் 6143 301. ஐயம் தீர்க்க – 9965851345**

# உங்களைச் சரிபார்த்துக்கொள்ள உதவும் அட்டவணை

## தமிழ் முதல் தாள்

| செய்யுள் பகுதி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 மதிப்பெண் | 30 | 15 | 10 | 11 | 11 | 2 | 14 | 12 | 13 | | 118 |
| 2 மதிப்பெண் | 17 | | 5 | | 8 | 3 | 9 | | 9 | | 51 |
| 4 மதிப்பெண் | | 6 | 3 | 2 | | | | 3 | | 1 | 15 |
| 8 மதிப்பெண் | 2 | 2 | 2 | | 3 | 1 | 2 | 1 | 1 | 1 | 15 |
| மனப்பாடம் | 11 | 2 | 2 | | 2 | | 10 | 1 | 1 | 1 | 30 |

| உரைநடைப்பகுதி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 மதிப்பெண் | 6 | 10 | 6 | 8 | 14 | 7 | 5 | 15 | 6 | 16 | 93 |
| 2 மதிப்பெண் | 5 | | | | 3 | 2 | 2 | 8 | 4 | 4 | 28 |
| 4 மதிப்பெண் | | 3 | 2 | 3 | | 2 | | 3 | | | 13 |
| 8 மதிப்பெண் | 1 | 2 | 2 | 2 | 1 | 1 | 2 | 2 | 2 | 2 | 17 |

## தமிழ் இரண்டாம் தாள்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 மதிப்பெண் | 12 | 4 | 6 | 9 | 8 | 7 | 17 | 6 | 13 | | 82 |
| 2 மதிப்பெண் | 4 | 7 | 5 | 5 | | 7 | 8 | 5 | | | 41 |
| மொழிப்பயிற்சி | 22 | 12 | 15 | 17 | 30 | 2 | 7 | 21 | 15 | | 141 |
| பா | | | | | | | | | 8 | | 8 |
| அணி | | | | | | | | | 3 | | 3 |
| துணைப்பாடம் | 2 | 2 | 3 | 1 | 1 | 3 | 3 | 1 | 1 | 2 | 19 |
| தமிழாக்கம் பத்தி | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 10 |
| தமிழாக்கம் சொல் | 1 | | | 1 | | | 1 | | | | 3 |
| தமிழாக்கம் பழமொழி | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 50 |
| கதை அல்லது கவிதை | | | 1 | | | | | 5 | | | 6 |
| பா நயம் பாராட்டல் | | | | | | | | | 2 | | 2 |
| சூழல் வினா விடை | | 1 | | 1 | 1 | | 1 | | 1 | 2 | 7 |
| பொதுக்கட்டுரை | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 10 |
| கடிதம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 4 | 1 | 1 | 13 |